# பொய்களும் ஏமாற்றுதலும் வேண்டாம்.

## சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்க.

பல தசாப்தங்களாக தமிழ் மொழியைப் பேசும் வட பகுதி தமிழ் மக்களும் கிழக்கு முஸ்லிம் மக்களும் மலையகத் தமிழ் மக்களும் தேசிய பிரச்சினை காரணமாக கடும் அடக்குமுறைக்கு உள்ளாகியுள்ளனர். பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் கிட்டிய பின்னர் இலங்கையை ஆட்சி செய்த அனைத்து கட்சிகளையும் சேர்ந்த முதலாளித்துவ ஆட்சியாளர்களிடம் நாட்டின் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உண்மையான அக்கறை இருக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி சுதந்திரக் கட்சி உட்பட அனைத்து முதலாளித்துவ கட்சிகளும் பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பவாத அரசியற் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதிலேயே ஆர்வம் காட்டி வந்தன. வடக்கில் போர் தீவிரமடைந்ததன் காரணமாக இந்திய அரசாங்கத்தின் வலுக்கட்டாயமான தலையீட்டின் கீழ் 1987ல் ஜே.ஆர்.ஜயவர்தனவுடன் இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் காரணமாக இந்த நிலைமையில் ஓரளவு மாற்றங்கள் ஏற்பட்டன. **அவ்வாறாக இருந்தபோதிலும் இது வரை காலமும் ஜனாதிபதி பதவியை வகித்த ஜே.ஆர், பிரேமதாச, சந்திரிகா, மகிந்த, மைத்திரிபால ஆகியோர் 13ம் திருத்தத்தினூடாக தமிழ் மக்களுக்கு சட்டரீதியாக கிடைத்த பொலிஸ், காணி அதிகாரத்தையும் வழங்கி உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.** அதற்கு பதிலாக அவர்கள் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட மாகாண சபையினூடாக தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்தனர். தற்போது அந்த மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் கால வரையறையின்றி பிற்போடப்பட்டள்ளது.

இந்நிலையில் போராட்டத்தின் புண்ணியத்தினால் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க 7 தசாப்தங்களுக்கு மேலாக தீர்க்கப்படாமல் ஒரே இடத்தில் தேக்கமடைந்திருக்கின்ற தேசிய பிரச்சினையை இரண்டு மாதங்களில் தீர்ப்பதாகக் கூறுவது மிகவும் வேடிக்கையாக இருக்கின்றது. அது மட்டுமன்றி இது பெரும் ஏமாற்றுத்தனமாகும். அது மட்டுமன்றி அவர் தமிழ் தலைவர்களையும் ஏமாற்றுகின்றார். அதேபோன்று தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சரியான திட்டங்கள் எதுவும் அற்ற தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ரணிலைக் காட்டி தமிழ் மக்களை ஏமாற்ற முனைகின்றனர். மக்களை ஏமாற்றுகின்ற இந்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னராவது ஆகக்குறைந்தது மாகாண சபை தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு ரணிலுக்கு அழுத்தம் வழங்க வேண்டும். **வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அரசியல் கைதிகள் பிரச்சினைக்கு தீர்வு. இராணுவ மயமாக்கல் மற்றும் மக்களின் பாரம்பரிய நிலங்கள் அபகரிப்பு நிறுத்தப்படல் வேண்டும்.** தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வடக்கிலும் தெற்கிலும் மலையக தொழிலாளர் வர்க்கம் உட்பட முற்போக்கு மக்களை ஒன்றிணைத்த ஓர் இயக்கத்தைக் கட்டியெழுப்புவது மிகவும் அவசியமான செயற்பாடாகும். **தேசிய பிரச்சினையை சுய**

**நிர்ணய உரிமையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட முதலாளித்துவ விரோத இடதுசாரி அரசாங்கத்தினூடாகவே தீர்வு காண முடியும் என்பதனை இங்கு நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.** மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு எந்த வலதுசாரியக் கட்சிகளிடமும் தீர்வு இல்லை. மக்களின் வாழ்வாதாரத்தைக் மேலும் குலைக்கும் திட்டங்களையே அவர்கள் முன்னெடுக்கிறார்கள். கடனை அடைக்க கடன் வாங்குவதுதான் ஒரே ஒரு தீர்வு என்கிறார்கள். ஒரு தலைமுறையே எதிர்காலம் இல்லாமல் நிற்கப்போகிறது என்பது பற்றி அவர்களுக்கு ஒரு துளிக் கவலையும் இல்லை.

எல்லா மக்களையும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளும் கொள்கைகளை முன்னெடுக்கும் அதே தருணம், அவற்றின் பாதிப்பை மூடி மறைக்க **தமிழ் முஸ்லிம் மக்களை, சிங்கள மக்களின் எதிரிகளாகக் கட்டமைக்கும் வேலையையும் செய்து வருகின்றனர் பல அதிகார சக்திகள். தமிழ் பேசும் மக்களின் தேசிய உரிமை உட்பட பல்வேறு அடிப்படை சனநாயக உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது.** முஸ்லிம் மக்களின் மத உரிமை உட்பட பல்வேறு உரிமைகள் மறுப்பதை முதன்மையாக கொண்டு இயங்கி வருகின்றன பல தீவிர வலதுசாரிய அமைப்புக்கள். கடும் உழைப்பை வழங்கி வரும் மலையக தொழிலாளர்களுக்கு அடிப்படை ஊதியமான குறைந்தபட்சம் ஆயிரம் ரூபா ஊதியத்தைக்கூட வழங்க அரசு முன்வரவில்லை.

எமது போராட்டங்கள் ஒன்றிணைய வேண்டும். எல்லாவித ஒடுக்குமுறைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. அடக்குமுறையால் பயன் பெறுவது பெரும் முதலாளிகளும் அவர்களைப் பாதுகாக்கும் அரச அதிகாரமுமே. அனைத்து சனநாயக உரிமைகளும் வென்றெடுக்கப்படவேண்டும். ஒடுக்கப்படும் தொழிலாளர்கள், மாணவர்கள், வறியோர் அனைவரும் தமது எதிர்காலத்தை தாமே தீர்மானித்துக் கொள்வதற்கான மாற்றை நாம் கொண்டு வரவேண்டும். இதன்மூலம் மட்டுமே வளங்களை நாம் அனைவருக்கும் உரிமையாக்கி கொள்ள முடியும். அந்த அடிப்படையில் மட்டுமே நாம் நிரந்தரத் தீர்வு நோக்கி நகர முடியம். அத்தகைய சோசலிச மாற்றுக்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது ஐக்கிய சோசலிச கட்சி.
ஒடுக்குமுறைகளுக்கு எதிராக உங்களை நிறுத்திக் கொள்கிறீர்கள் என்றால் மக்களின் விடுதலை நோக்கி பங்களிப்பு செய்ய விரும்புவீர்களானால், எம்மாடு இணைந்து வேலை செய்யுங்கள் என நாம் அழைக்கிறோம். போராட்ட சக்திகளின் ஒன்றிணைவும் வளர்ச்சியும்தான் அனைவருக்குமான விடுதலையைப் பெற்றுத்தரும் சமூக மாற்று நோக்கி எம்மை நகர்த்தும்.

**எங்களுடன் இணைந்து கொள்ள பின்வரும் இலக்கத்தில் அல்லது மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளுங்கள்.**


**ஐக்கிய சோசலிஸ்ட் கட்சி:**

Tele - 0112504647 / E mail - unitedsocialists@gmail.com

FB - USP / Web - LankaSocialist.com / CWI - www.socialistworld.net


Published by : United Socialist Party - 53/6, E.D.Dhabare Mawatha, Narahenpitta, Colombo 5